# யூன் – 24 – திங்கள்

## புனித திருமுழுக்கு யோவானின் பிறப்பு

**ஆண்டவரே! நீர் என்னை ஆய்ந்து அறிந்திருக்கின்றீர்! திபா 139 – 1**

---

## முதல் வாசகம் : ஏசாயா 49 : 1 - 6

தீவு நாட்டினரே, எனக்குச் செவிகொடுங்கள். தொலைவாழ் மக்களினங்களே, கவனியுங்கள் கருப்பையில் இருக்கும்போதே ஆண்டவர் என்னை அழைத்தார். என் தாய் வயிற்றில் உருவாகும் போதே என் பெயர் சொல்லிக் கூப்பிட்டார்.என் வாயைக் கூரான வாள்போன்று ஆக்கினார். தம் கையின் நிழலால் என்னைப் பாதுகாத்தார். என்னைப் பளபளக்கும் அம்பு ஆக்கினார். தம் அம்பறாத் தூணியில் என்னை மறைத்துக் கொண்டார்.அவர் என்னிடம், "நீயே என் ஊழியன், இஸ்ரயேலே! உன் வழியாய் நான் மாட்சியுறுவேன்" என்றார்.நானோ, "வீணாக நான் உழைத்தேன் வெறுமையாகவும் பயனின்றியும் என் ஆற்றலைச் செலவழித்தேன். ஆயினும் எனக்குரிய நீதி ஆண்டவரிடம் உள்ளது. என் பணிக்கான பரிசு என் கடவுளிடம் இருக்கின்றது" என்றேன்.யாக்கோபைத் தம்மிடம் கொண்டு வரவும், சிதறுண்டு இஸ்ரயேலை ஒன்று திரட்டவும் கருப்பையிலிருந்தே ஆண்டவர் என்னைத் தம் ஊழியனாக உருவாக்கினார். ஆண்டவர் பார்வையில் நான் மதிப்புப்பெற்றவன் என் கடவுளே என் ஆற்றல். அவர் இப்பொழுது உரைக்கிறார். அவர் கூறுவது யாக்கோபின் குலங்களை நிலைநிறுத்துவதற்கும் இஸ்ரயேலில் காக்கப்பட்டோரைத் திருப்பிக் கொணர்வதற்கும் நீ என் ஊழியனாக இருப்பது எளிதன்றோ? உலகம் முழுவதும் மீட்பை அடைதற்கு நான் உன்னைப் பிற இனத்தாருக்கு ஒளியாகவும் ஏற்படுத்துவேன்.

**பதில்பாடல் :** வியத்தகு முறையில் என்னைப் படைத்ததால், நான் உமக்கு நன்றி நவில்கிறேன்.

## நற்செய்தி : லூக்கா 1 :57 – 66, 80

எலிசபெத்துக்குப் பேறுகாலம் நெருங்கியது. அவர் ஒரு மகனைப் பெற்றெடுத்தார். ஆண்டவர் அவருக்குப் பெரிதும் இரக்கம் காட்டினார் என்பதைக் கேள்விப்பட்டுச் சுற்றி வாழ்ந்தோரும் உறவினரும் அவரோடு சேர்ந்து மகிழ்ந்தனர்.எட்டாம் நாளில் அவர்கள் குழந்தைக்கு விருத்தசேதனம் செய்ய வந்தார்கள். செக்கரியா என்ற அதன் தந்தையின் பெயரையே அதற்குச் சூட்ட இருந்தார்கள்.ஆனால் அதன் தாய் அவர்களைப் பார்த்து, "வேண்டாம், அதற்கு யோவான் எனப் பெயரிடவேண்டும்" என்றார்.அவர்கள் அவரிடம், "உம் உறவினருள் இப்பெயர் கொண்டவர் எவரும் இல்லையே" என்று சொல்லி, "குழந்தைக்கு என்ன பெயரிடலாம்? உம் விருப்பம் என்ன?" என்று தந்தையை நோக்கிச் சைகை காட்டிக் கேட்டார்கள். அதற்கு அவர் எழுதுபலகை ஒன்றைக் கேட்டுவாங்கி, "இக்குழந்தையின் பெயர் யோவான்" என்று எழுதினார். எல்லாரும் வியப்படைந்தனர். அப்பொழுதே அவரது வாய்திறந்தது. நா கட்டவிழ்ந்தது. அவர் கடவுளைப் போற்றிப் புகழ்ந்தார்.சுற்றி வாழ்ந்தோர் அனைவரும் இதைப்பற்றிக் கேள்விப்பட்டு அஞ்சினர். இச்செய்தி யூதேய மலை நாடெங்கும் பரவியது.கேள்விப்பட்டவர்கள் யாவரும் இச்செய்தியைத் தங்கள் உள்ளங்களில் இருத்தி, "இக்குழந்தை எப்படிப்பட்டதாக இருக்குமோ?" என்று சொல்லிக் கொண்டார்கள். ஏனெனில் அக்குழந்தை ஆண்டவருடைய கைவன்மையைப் பெற்றிருந்தது.குழந்தையாயிருந்த யோவான் வளர்ந்து மனவலிமை பெற்றார். இஸ்ரயேல் மக்களுக்குத் தம்மை வெளிப்படுத்தும் காலம்வரை அவர் பாலைநிலத்தில் வாழ்ந்து வந்தார்.

**தியானம்:** நேர்மையான முறையில், உண்மையை நேருக்கு நேர் அஞ்சாது எடுத்துரைத்த புனிதர் திருமுழுக்கு யோவானின் பிறப்பு விழாவை இன்று அன்னையாம் திருச்சபை கொண்டாடுகின்றாள். திருமுழுக்கு யோவானின் பிறப்பினைத் தெரிவிக்கும் தொடர்ச்சியாக இன்றைய நற்செய்தியை நாம் கருதினாலும் இன்றைய நற்செய்தி எம் ஒவ்வொருவருக்கும் மாபெரும் அறைகூவல் ஒன்றை விடுக்கின்றது. ஏனெனில் “கிறிஸ்தவர்கள் என முகவரி சூட்டியுள்ள” எம்மை உண்மைக் கிறிஸ்தவர்களாக, திருமுழுக்கு யோவான் போன்று அநீதியைச் சுட்டிக்காட்டி இறைமகன் இயேசுவுக்குள் நற்கனி கொடுக்கின்ற மரங்களாக வாழ அழைக்கின்றது. எனினும் பொய்மையும், ஏமாற்றமும், பித்தலாட்டமும் மலிந்த இந்த உலகில் நல்லவற்றை செய்கின்ற, நல்லவற்றைச் சுட்டிக் காட்டுகின்ற அல்லது நல்லவற்றைச் சொல்கின்ற உண்மைக் கிறிஸ்தவர்களாக வாழ முடிகின்றதா? எனவே எமது சொல், செயல், சிந்தனை ஒருமித்ததாக இருப்பது மட்டுமல்ல நாம் நல்லவற்றை பேசுகின்றதாக மட்டுமல்லாது, நல்லவற்றைச் செய்கின்ற உள்ளம் உடையவர்களாகவும் இருக்கவேண்டும். அதே வேளையில் நாம் நல்லது என நினைப்பவை இறைவனுக்கு ஏற்றவையாகவும் இருத்தல் அவசியம். இதற்காக எமது வாழ்வின் ஒவ்வொரு கணப்பொழுதிலும் கிறிஸ்து எனும் பெருவிருட்சமான ஆண்டவர் இயேசுவில் நாம் நிலைத்து இருக்கவேண்டும். ஆதலால் புனித திருமுழுக்கு யோவான் தம்மை வெளிப்படுத்தும் வரை பாலை நிலத்தில் ஜெபத்தில் வாழ்ந்து வந்தாரோ அவ்வாறே நாமும் எமது உள்ளார்ந்த மனிதனை அனுதினமும் செபத்திலே நிலைத்திருக்க அனுமதிக்க வேண்டும். இறைவார்த்தை வழியாக ஆண்டவர் இயேசு எம்மோடு பேசுவதனைக் கேட்கவேண்டும். புனித திருமுழுக்கு அருளப்பர் போன்று உண்மையைப் பேசி, பொய்மையைக் கண்டித்து வாழவேண்டும். ஏனெனில் எமது பரலோக தகப்பன் எமது முகத்தினைப் பார்க்கவில்லை. மாறாக, எமது உள்ளத்தை ஆராய்ந்து பார்க்கின்றார். இதனாலேயே “நல்ல கனிகொடாத மரங்களெல்லாம் வெட்டப்பட்டு நெருப்பில் எறியப்படும்” என ஆண்டவர் இயேசு ஏற்கனவே ஆணித்தரமாக, உறுதியாக எமக்குக் கூறியுள்ளார். எனவே எமது குடும்பத்தில், அல்லது சமூகத்தில் இறை பணி என்ற பெயரால் நாம் செய்யும், சொல்லும், அல்லது செயல்படுத்த முயலும் காரியங்கள் எதுவும் இறைவனுக்கு உகந்தவையா? அல்லது எம் போன்ற தனி மனிதனைத் திருப்திப்படுத்துபவையா? என எம்மை நாமே ஆராய்ந்து பார்ப்போம்.